செ.வெ.எண்:78/2019 நாள்:30.10.2019

## பத்திரிக்கைச் செய்தி

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் தசைச் சிதைவு நோய் மற்றும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்படஉள்ளது.

பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள் தேவைப்படும் மாற்றுத்திறனுடைய நபர்கள் கீழ்காணும் தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகள் விவரம் :-**

- தசைச்சிதைவு நோய் அல்லது பக்கவாதத்தால் முதுகுதண்டுவடம் பாதிக்கப்பட்ட இரண்டு கால்களும், இரண்டு கைகளும் செயலிழந்து (Tetraplegic/quadriplegic) மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும்.
- கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு மற்றும் பணிபுரிவர்களுக்கும் மற்றும் சுயதொழில் புரிபவர்களுக்கும் தகுதியின் அடிப்படையில் பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கப்படும்.
- பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள் 10 சதவீகிதம் மத்திய மாநில அரசுகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளுக்கும், மூத்த குடிமக்களான 60 வயதிற்கு உப்பட்ட ஆண் மாற்றுத்திறனாளிகளுக்கும், 55 வயதிற்கு உட்பட்ட பெண் மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கப்படும்.
  - பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள் மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

எனவே, தேவைபடும் மாற்றுத்திறனுடைய நபர்கள் புகைப்படத்துடன் தாங்களின் முழு விவரங்களுடன், மற்றும் தகுதியுடைய சிவகங்கை மாவட்டத்தை சார்ந்த மாற்றுத்திறனுடைய நபர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் உரிய சான்றுகளுடன் 06.11.2019 அன்று நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு பயனடையுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்.,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::செய்தி வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**